**I.A.5/2026 in OS.148/2025**

**நாள். 07.04.2026.**

**ம.சா. 2 – அழகர்சாமி, த/பெ.காளிமுத்து**

நான் அசல் வழக்கில் 4ம் பிரதிவாதி ஆவேன். தாவா சொத்தை நான் 2, 3ம் பிரதிவாதிகளிடமிருந்து கடந்த 18.03.2023ம் தேதி கிரையம் பெற்றுள்ளேன். மேற்படி கிரைய ஆவணம் செல்லாது என வாதிகள் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளனர். 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை 1ம் பிரதிவாதியிடமிருந்து 12.04.2022 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளார்கள். வாதிகளும், 2 முதல் 4 பிரதிவாதிகளாகிய நாங்களும் சமாதானம் பேசி அந்த சமாதானத்தின் படி தீர்ப்பாணை பிறப்பிக்க கட்டளை 23 விதி 3ன் கீழ் கடந்த 02.04.2026ம் தேதி மனுதாக்கல் செய்துள்ளோம். அந்த மனுவில் கண்டுள்ள சங்கதிகளை நாங்கள் படித்துப்பார்த்து சரியென ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்துள்ளோம். கட்டளை 23 விதி 3 மனுவில் சொல்லியுள்ளவாறு தீர்ப்பாணை பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.

I.A.5/2026 in OS.148/2025

நாள். 07.04.2026.

ம.சா. 1 – திப்புசுல்தான், த/பெ.நஜிபுல்லாகான்

<u>மனுதார்கள் தரப்பு முதல் விசாரணை:–</u>

நான் அசல் வழக்கில் 1ம் வாதி. 2, 3 வாதிகளின் அதிகார முகவர் என்ற முறையில் தாவா வழக்கை நடத்தி வருகிறேன். தாவா சொத்து வாதிகளான எங்களுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யவும், தாவா சொத்தினை வாதிகள் அனுபவம் செய்து வருவதை 4ம் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிவும், ஒருவேலை இந்நீதிமன்றம் தாவா சொத்து 4ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என முடிவுக்கு வரும்பட்சத்தில் தாவா சொத்தின் சுவாதீனத்தை 4ம் பிரதிவாதி வாதிகளிடம் வசம் ஒப்படைக்க உத்தரவிடவேண்டும் என சுவாதினபரிகாரம் கோரியும், மேலும் 1ம் பிரதிவாதி 07.03.2000ம் தேதியில் எழுதிக்கொடுத்துள்ள கிரைய ஆவணம் செல்லாது என விளம்புகை செய்யவும், 1ம் பிரதிவாதி தனது அதிகார முகவர் மூலம் 11.04.2022ம் தேதி ஏற்படுத்திக்கொடுத்துள்ள கிரைய ஆவணம் செல்லாது என விளம்புகை செய்யவும், 2, 3 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதிக்கு 18.03.2023ம் தேதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் செல்லாது என விளம்புகை செய்யக்கோரியும் மற்றும் செலவுத்தொகைக்கும் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2 முதல் 4 பிரதிவாதிகள் இவ்வழக்கில் கடந்த 12.03.2026ம் தேதி ஆஜராகி சமரசமாக செல்லலாம் என கேட்டுக்கொண்டதின்பேரில் 1ம் பிரதிவாதி இவ்வழக்கிலிருந்து குறிப்பாணையின்பேரில் நீக்கரவு செய்யப்பட்டார். 2, 3 வாதிகள் தரப்பில் நானும், 2 முதல் 4 பிரதிவாதிகளும் சமரசமாக பேசிக்கொண்டதில் தாவா சொத்தான 19 சென்டில் 8 சென்டு வாதிகள் அடைந்து கொள்ளவேண்டும் என்றும், 8 சென்டு 4ம் பிரதிவாதி அடைந்து கொள்ள வேண்டும் என்றும், 3 சென்டு இருநபர்களும்

பாதையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பேசி முடிவு செய்யப்பட்டு, நாங்கள் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையை இந்நீதிமன்றம் பதிவு செய்வதற்காக இருதரப்பினரும் சேர்ந்து கட்டளை 23 விதி 3ன் கீழ் மனுதாக்கல் செய்துள்ளோம். மேற்படி மனுவில் நாங்கள் பேசிச்கொண்ட விவரத்தை விவரமாக கூறியுள்ளோம். எங்களது சமாதான மனுவை ஏற்று அதன் அடிப்படையில் தீர்ப்பு செய்யுமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். வாதிகளும், 2 முதல் 4 பிரதிவாதிகளும்சமாதானம் பேசி அந்த சமாதானத்தின் படி தீர்ப்பாணை பிறப்பிக்க கட்டளை 23 விதி 3ன் கீழ் கடந்த 02.04.2026ம் தேதி மனுதாக்கல் செய்துள்ளோம். அந்த மனுவில் கண்டுள்ள சங்கதிகளை நாங்கள் படித்துப்பார்த்து சரியென ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்துள்ளோம். கட்டளை 23 விதி 3 மனுவில் சொல்லியுள்ளவாறு தீர்ப்பாணை பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.